# வேத சாரமே சைவசமயம்

---

## ஆரியம் கலவாத் தமிழ் நாகரிகம்
# நாம் அறிந்ததேயில்லை!

---

### தமிழ்நாற் பரப்பு நல்ல சான்று பகரும்.

---

[ மாவிட்டபுரம், வேதாகம நூல் நிலையத்தில் சென்ற மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தில், பண்டிதர் திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சி உரையைத் தழுவி எழுதியது ]

"ஆரியரைத் தொலையுங்கள்! தமிழன் பண்பாட்டைப் பின்பற்றுங்கள்! இராமாயணத்தை எரியுங்கள்! சம்ஸ்கிருத பாஷையைக் குழி தோண்டிப் புதையுங்கள்!," என்றெல்லாம் இளம் வாலிபர் வாயிலிருந்தும் அறிவால் முதிரா முதியோர் வாயிலிருந்தும் முழக்கங்கள் எழுவதைக் கேட்டோம்; பன்னாட் சகித்திருந்தோம். ஆனால் பொய்மையே பலகாலும் கூறுவதால் மெய்யாக்கி அதையே ஆணித்தர உண்மையுமாக்கிப் பள்ளி இளஞ் சிறாரின் உள்ளங்களை நஞ்சாக்குங் கொடுமையைச் சகிக்க முடியவில்லை!

புற்றீசல் போலக் கிளர்ப்பும் அரையணாப் புத்தகங்களில் இராமாயண முச்சிதைந்த தமிழில் வெளிவரும் தினசரிகளில் குறைவா?, கற்றுத் தமிழன் பண்பாட்டைக் கொட்டிக் குமுறும் வாலிப மாணவர்கள் எத்தனை பேர்! கம்பன் கவியை எரிக்கத்தான் வேண்டுமென்று காது செவிடுறவும், ஒலிபெருக்கிகள் கதறவும் கனல் கக்குவோர் எத்தனைபேர்! வீரத் தமிழன் என்று குமுறுங் கட்டுரையுமில்லை! கதறுங் பிரசங்கமுமில்லை! ஆனால் அமைந்த புத்தியும், பழுத்த அநுபவமும், வழுவாத தமிழ் மரபும், இறைவன் திருவடியில் பதித்த மனமுமாய் நிறைந்தோர் இவற்றை வீண் பிதற்றல் என்று வாளாவிருக்கின்றனர்! அதனால் பிதற்றலே மெய்யாகிறது.

## தமிழ்ப் பண்டை நாகரிகம்

"ஆரியம் ஒழிக!" என்று கூறித் தமிழ்ச்சேவை செய்ய மார்தட்டும் வீரர்களே! சிறிது சிந்தியுங்கள்! உங்கள் பகுத்தறிவை உபயோகியுங்கள்! ஆரியங் கலவாத தனித்தமிழ்ப் பண்பாடு எங்கே உள்ளது?

தமிழனுடைய மிகத் தொன்மையான நாகரிகத்தை நாம் ஒருவாறு அறியக் கூடியதாய் இருக்கும் சான்றுகளில் புதைபொருளாராய்ச்சியும் தொன்னூல்களுமே மிகப் பிரதானமானவையாயிருக்கின்றன. புதைபொருளாராய்ச்சியோ கடல் கொண்ட தமிழ்நாட்டின் பண்பாட்டைப் பற்றித் தெளிவாக ஒன்றும் கூறுகின்றிலதே! ஆதலால் தமிழர் பண்பாட்டை நாம் ஆராய்தற்குத் தகுந்த சான்றுகளாக நம் கையகத்திருப்பன தொல்காப்பியம் அகத்தியம் (சில சூத்திரங்கள்) என்னும் இலக்கண நூல்களும் நமக்குக் கிடைத்த சங்க இலக்கியங்களுமே. இவற்றில் எல்லாம் ஆரியம் கலவாத தனித்தமிழ் நாகரிகம் அமைந்துளதா? காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆராய்தல் அறிவுடையோர் கண்ணதே என்றுணர்ந்து நடுநின்று ஆராயுங்கள்!

## ஐந்திணைத் தெய்வங்கள்

தமிழர் நாகரிகத்தின் ஆணியான அகத்திணைக்குத் தெய்வம் வகுக்குங்கால் "வருணன் மேய பெருமணலுலகமும" என்றார் தொல்காப்பியர்" இவ்வருணன் என்ற தெய்வம் எங்கே உள்ளது? ஆரியரது இருக்கு வேதத்திலன்றோ! இருக்கு வேதத்திற் கண்ட இந்திரனை மருதத்திற்குத் தெய்வமாகவும், விஷ்ணுவை முல்லைக்குத் தெய்வமாகவும் கொண்டது யார்? ஆரியரா? தமிழரா?

இருக்கு வேதத்திற் கண்ட இந்திரனையும், விஷ்ணுவையும், வருணனையும் தெய்வங்களாகக் கொண்ட மருதம், முல்லை, நெய்தல் என்பன சங்க இலக்கியங்கள் முற்றிலும் நிறைந்து கிடக்கின்றனவே! அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு முதலாம் தொன்மைசான்ற தமிழ் நூல்கள் எல்லாம் ஐந்திணையை அடிப்படையாகக் கொண்டவையன்றோ! அந்நூல்களைச் செய்த செஞ்சொற் புலவோரையும் ஆரியநாகரிகத்தின்பின் பற்றிய சூழ்ச்சியாளர் என்று வெறுத்தொதுக்கினால் தனித்தமிழ்ப் பண்புடையார் யார்? தொல்காப்பியரே வடமொழியைத் தமிழில் எவ்வாறு பிரயோகிக்க வேண்டுமென்று சூத்திரமும் செய்து தாமே ஆரியக் கடவுளையும் ஏற்றுக்கொண்டமையின் தமிழின் ஆதித் தந்தையாகிய அவரையும் ஆரியத் தமிழன் என்று ஒதுக்குவோமா?

## கண்ணகியின் சரிதை

சிலப்பதிகாரத்திற்றானும் தனித்த ஒரு தமிழன் நாகரிகம் இயங்கியதா? கோவலனும் கண்ணகியும் எப்படி மணம் புரிந்து கொண்டார்கள்?

"சாலியொரு மீன் றகையாளைக்
கோவலன்
மாமுதுபார்ப்பான் மறைவழி
காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க
ணோன்பென்னை"

தமிழர் தெய்வமெனக் கோவிலெடுத்த கற்புக்கரசியாகிய கண்ணகியே பார்ப்பான் மறைவழி காட்டிடக் கடிமணம் செய்துகொண்டமையின் அவளையும் ஆரிய நாகரிகத்தைக் கொண்டொழுகிய அந்நியப் பெண் என்று ஒதுக்குவோமா? தமிழர் பண்பாடு உச்சநிலை எய்தியிருந்த சிலப்பதிகாரத்திலேயே இருக்கு வேதத்தில் முதலிடம் பெற்ற இந்திரனுக்கு மக்கள் விழாச் செய்து கொண்டாடியிருக்கின்றனர். அவ்விழாவை நகரிலுள்ள மாந்தரனைவரும் மிகக் கழிபேருவகையுடன் கொண்டாடியிருப்பதை அறிகின்றோம். கோவலனும் மாதவியும் அவ்விழாவை இனிதே கொண்டாடியிருக்கின்றனர்.

வச்சிரக் கோட்டத்து
மணங்கெழு முரசக்
கச்சை யானைப்
பிடர்த்தலை யேற்றி"

என்றும்,

"மண்ணக மருள வானகம்
வியப்ப
விண்ணவர் தலைவனை
விழுநீராட்டி"

என்றும், வருவனவற்றால் யாது பெறுகின்றோம்? இருக்கு வேதத்தில் விதந்தோதப்பட்ட இந்திரனைத் தமிழரும் போற்றியிருக்கின்றனர் என்பதே!

## அந்தணரும் பார்ப்பாரும்

இனி அந்தணர் வேறு இப்பொழுதிருக்கும் பார்ப்பார் வேறு என்று அந்தணருக்கு ஒரு புது வியாக்கியானம் செய்யவும் நம்மனோர் தலைப்பட்டிருக்கின்றனர். ஆனால், பாவம்! அவர்களை நாணமுறச் செய்யும்படி தொல்காப்பியரும் சங்கப் புலவர்களுமே பார்ப்பார் என்று குறிப்பிட்டுப் போயினர்.

"கரிய மாலினும்
கண்ணுதலானினும்
பெரிய ரந்தணர்
பேணுதி உள்ளத்தால்"

என்று கம்பநாடர் கூறியதால் ஆரியப் பார்ப்பனரை வழிபடும்படி கூறினர் என்றும் அதனால் இராமாயணம் எரிக்கப்படவேண்டும் என்றும் கூறும் திட்டி முழக்கும் கழகத்தார் (திராவிட முன்னேற்றக் கழகத்தார்) புறநானூற்றி

லும், பரிபாடலிலும், பதிற்றுப்பத்திலும், சங்கச் சான்றோரும், பார்ப்பாரைப் போற்றியிருப்பதுகண்டு வாது செய்யப்போகின்றனரோ!

"ஆவு மானியற் பார்ப்பன
    மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும்
    பேணித்
தென்புல வாழ்நாக் கருங்கட
    னிறுக்கும்
பொனபோற் புதல்வர்ப்
    பெறுதிரும்"

என்று புறநானூறு விதந்து கூறுவதும் பார்க்கிலர்.

"பார்ப்பார்க் கல்லது
    பணி பறி பலையே!"

என்று பதிற்றுப்பத்து முழங்குவதுமறிந்திலரோ!

மேலும், "நின் முன்னோரெல்லாம் பார்ப்பார் நோவன செய்யலர்" முதலிய வரிகளெல்லாம் கருத்தற்றனவோ?

அந்தணர் - வேதத்துக் கண்ட ஆரிய நாகரிகத்தையே பின்பற்றி ஒழுகி வந்தனர் என்பதற்குச்சான்றுகள் சங்க நூற்பரப்பு முழுமையும் ஆங்காங்கே காணகின்றன. அவை யெல்லாவற்றையும் திரள்பட வகுத்துக் காட்டல் இச் சிறு துண்டுப் பிரசுரத்தில் முடியாதாகையால் அச் சான்றுகளாற் கண்ட முடிபையே நாம் தருகின்றோம். சங்ககாலத்திலே ஆரியம் சற்றேனும் கலவாத ஒரு தனித் தமிழ் நாகரிகம் இருந்ததில்லை.

## மறையைப்பற்றிய உரை

மறை என்று சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் சுட்டப்படுவதெல்லாம் தமிழிலே இருந்து அழிந்து ஒழிந்த ஒரு மறையை என்று சிலர் கூறும் கூற்றை எண்ணி நகையாடாதிருக்க முடியவில்லை. சமுத்திரத்தில் மூழ்கி யிறப்போன் வைக்கோலைத் துணை பிடித்தாற் போல இலக்கியச் சான்றுகளால் நெருக்கப்பட்டு உண்மை உணர வேண்டிய காலத்தும் கொண்டது விடோம் என்று நிற்பாரை என்னென்பது! தமிழிலேயிருந்து மறைந்தவையைப் பற்றிய பேச்சேன்? அங்ஙனமாயின் வடமொழியிலும் பல்லாயிர நூல்கள் மறைந்திருக்கலாமே. வடமொழியிலே திருக்குறள் என ஒரு நூல் இருந்தது அதைத்தான் வள்ளுவர் மொழி பெயர்த்தார் என்றும் அவ் வடமொழிக் குறள் இப்பொழுது அழிந்து போயிற்று என்றும் சொல்லலாம். இவையெல்லாம் ஒரு மொழியிலே கொண்ட பற்றினால் உண்டாகும் ஆசைமொழிகள். உண்மையை நோக்குமிடத்துப் பற்றுக்களை விட்டு நோக்க வேண்டும். இன்று நமக்கு முன்னே இருக்கும் நூல்களில் அத்தகைய மறை ஒன்று இருக்கிறதா? அற்றேல்

அம்மறையிலிருந்து ஏதாவது இரண்டொரு பாக்களேனும் சொல்லமுடியுமா? முடியாதென்றால் அவைகளைப்பற்றி எடுத்துரைப்பானேன்?

## மொழியும் சமயமும்

ஒரு மொழியின் தன்மையையும் ஒரு சமயத்தையும் பிரித்து நியாயிக்க முடியாது பலர் இடர்ப்படுகின்றனர். சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் உள்ள உறவு அத்தகைய பிரிக்கப்படாததொன்றே எனினும் நாம் பகுத்துணருங்கால் இவற்றை வெவ்வேறாக்க வேண்டாம். வடமொழி, சொற்களீந்தும், இலக்கியங்களை உதவியும், சமய உண்மைகளைக் கொடுத்தும், பல மாற்றங்கள் செய்திருக்கின்றது. அதேபோலத் தமிழிலும் பல சமய உண்மைகள் உண்டாகியிருக்கின்றன. இவையிரண்டும் பிரிக்க முடியாதபடி ஒன்று சேர்ந்து ஒரு புதுச் சமயம் ஆகலாம். விஞ்ஞான உண்மைகள் எல்லாம ஒரு மொழியிலா கண்டுபிடிககப்படுகின்றன? ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ருஷியா, சைனு, முதலிய பல பாஷைகளிலும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நாளுக்கு நாள் வளருகின்றன. அவற்றை வேண்டியவர்கள் தம் மொழியில் ஏற்று தம் ஆராய்ச்சிகளையும் கலந்து புது எண்ணங்களைப்பெறுகிருர்கள். இது அறிவு வளர்ச்சியின் முறை. நமக்கு ஒவ்வாத சில எண்ணங்கள் ஒரு பாஷையில் இருக்குமானல், அதற்காக அம்மொழியைத் திட்டுவது எவ்வளவு பேதைமை!

சைவசமயத்தை ஆரியர்கள் கெடுத்துவிட்டார்கள் என்றும் சைவசமயமோ தமிழன் சமயம் என்றும் சிலர் கூப்பாடுபோடுகின்றனர். சங்க கால இலக்கியங்களிற் காணப்படும் சான்றுகளிலிருந்து பார்த்தால் முருகன் வெறியாட்டும், கொற்றவை வணக்கம் போன்றவைவுமே ஆரியத்திலிருந்து வருவிக்காத தனித் தமிழ் வணக்க முறையாகத் தென்படுகிறது. சங்ககாலத்திலும் ஏனைய வணக்கமுறைகளெல்லாம் வேதங்களிற் சொல்லப்பட்ட முறைகளையே பின்பற்றுகின்றன.

மணிமேகலையிற் சைவவாதம் என்று ஒரு சமய நெறியைக்காண்கிறேம். அது தான் தமிழன் சமயம் என்று சொல்லவும் சான்றுகளில்லையே!

## சமயாசாரியர் ஒழுகிய சைவம்

ஆனல் மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய நால்வரும் ஒழுகிய சைவம், வடமொழி ஆதி நூல்களாகிய நான்கு வேதங்களையுமே அத்திபாரமாகவும்,

பிரமாணமாகவும் கொள்கின்றது. வடமொழியில் ஒரு சொல்லையேனும் இன்று உச்சரியாமல் ஒருவன் சைவனுயிருக்க முடியாது! காலை மாலை ஒருவன் பஞ்சாட்சரம் செபிக்க வேண்டுமானுல் வடமொழியை உச்சரியாது செய்ய முடியுமா? நித்திய கரும விதியாகிய அநுட்டானங்கள் எல்லாம் வடமொழி மந்திரங்களிற்ருன் உள்ளன. "தேவாரங்களைச் சொல்லிப் பூசை செய்வோம், வடமொழியை அடித்துவிரட்டுவோம்" என்று கூறும் சைவர்களுக்கு ஒன்று கூறுவோம்: வேத சிவாகம முறைப்படி அருச்சிக்கப்பட்ட கோவில்களிலேயே வேதத்திற் கூறப்பட்ட முறையிலேயே சமய குரவரெல்லாம் வழிபட்டனர். திருவடைய தேவாரங்கள் எல்லாம் பின்னுல் அருச்சனைமந்திரங்களாக மாறவேண்டுமென்று சமயாசாரியர்கள் நால்வரும் அவற்றை யாத்துப் போகவில்லை. தேவாரங்களைப் பாடி பாடி இறைவனை வழுத்தலாம்; உருகலாம். ஆனுல் அவற்றை அருச்சனை மந்திரங்களுக்குப் பதிலாகப் பிரயோகிக்கலாம் என்றெண்ணுவது சைவநெறியல்ல. அது இக்காலத்தவர் காண விரும்பும் சமய நெறியாகலாம். ஆனுல் நால்வர் கண்ட சைவம் அதுவல்லவே!

## வேதசாரமே சைவம்

"வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாத னும நமச்சிவாயவே"

என்று வேதசாரமே சைவம் என்கிருர் நாவுக்கரசும்.

"வாழ்க அந்தணர்" என்று தொன்னெறியாம் நன்னெறி நிற்கும் ஆரியப் பார்ப்பனரையன்ரே முதலில் வாழ்த்திப் போந்தார் சம்பந்தர்! "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க" என வைதிக சைவ நெறியையன்ரே வற்புறுத்தினர் சேக்கிழார் பெருந்தகையும்! வேதமே சைவத்தின் பிரமாணம் என்பதற்கு நால்வர் தேவார திருவாசகங்கள் எடுத்தவிடமெல்லாம் சொல்லுக்குச் சொல் சான்று தருகின்றன. சுருங்கச் சொன்னுல் வேதமே சைவத்தின் பிரமாண நூல். வேதத்தையும் பார்ப்பாரையும் தூஷித்துக்கொண்டு சைவனுக ஒருபோதும் இருக்க முடியாது. வடமொழியை நாவால் ஒருபோதும் உச்சரியோம் என்பவர் சைவராயிருக்கமுடியாது.

அறிஞர்களே!

இதுகாறும் கூறியவற்றைச் சுருக்கிக் கூறுவோம். கிடைக்கக் கூடிய எந்தத் தமிழ் நூலிலாயினும் ஆரியப் பண்பாடு கலவாத தனித் தமிழ் நாகரிகம் இருந்ததேயில்லை. ஆகவே தனித் தமிழ் நாகரிகம் எனக்கூச்சலிடுவது வீண். வேதாகமங்களைத் தள்ளி விட்டு நால்வர் கண்ட சைவப்படி — காவலர் புரந்த சைவப்படி வாழ முடியாது. பொதுவுடைமை வாதிகள் கண்ட சைவப்படி ஒருகால் வாழலாம்.

28—8—53 இந்துசாதனத்திலிருந்து அநுவதிக்கப்பெற்றது.

சைவப்பிரகாசயந்திரசாலை, யாழ்ப்பாணம்.